# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| | ஓய்வூதியத் திணைக்களம் பற்றிய விவரணம் | 3 - 7 |
| 1. | பதிவு செய்தல் பிரிவு | 8 - 9 |
| 2. | கொடுப்பனவுகளின் விருத்தி | 10 - 15 |
| 3. | விதவைகள் அனாதைகள் ஓய்வூதியப் பிரிவு | 15 - 16 |
| 4. | நிர்வாக மற்றும் பயிற்சிப் பிரிவு | 17 - 18 |
| 5. | கொள்கைகள் மற்றும் சட்டப்பிரிவு | 19 - 20 |
| 6. | அரச சேவைகள் சேமலாப நிதியம் | 21 |
| 7. | உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 22 |
| 8. | கணக்குப் பிரிவு | 23 - 25 |
| 9. | ஓய்வூதியத் திணைக்களத்தினுள் ஓய்வூதியர்களுக்காக வேண்டி 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் | 26 - 27 |
| 10. | தேசிய ஓய்வூதியர் தினம் - 2014 | 27 - 28 |
| 11. | இறம்பொடை விடுமுறை விடுதி | 29 |
| 12. | களணி வெதமுல்லை விடுமுறை விடுதி | 30 |
| 13. | ஒதுக்கீட்டுக் கணக்கு | 31 - 37 |




ஒ.உ. – ஓய்வூதிய உத்தியோகத்தர்
வ.உ. – வரவு செலவுத்திட்ட உதவியாளர்
ஆ.உ. – ஆவண உதவியாளர்
அலு.உ. – அலுவலக உதவியாளர்

அ.உ. – அபிவிருத்தி உத்தியோகத்தர்
மு.உ. – முகாமைத்துவ உதவியாளர்
தொ.உ. – தொழினுட்ப உத்தியோகத்தர்.
வி.பொ. – விடுதிப் பொறுப்பாளர்.

## ஓய்வூதியத் திணைக்களம் - அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினர்

| பதவியின் தன்மை | பதவி | ஏற்புடைய சேவை | சம்பளத் திட்டம் | அங்கீகரிக்கப்பட்ட மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை | கடமையில் உள்ள எண்ணிக்கை | பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகம் | SLAS (Special) | SL 3 | 01 | 01 | - |
| | ஓய்வூதியப் பணிப்பாளர் | SLAS (Class I) | SL 1 | 03 | 03 | - |
| | பிரதான கணக்காளர் | SLAcS (Class I) | SL 1 | 01 | 01 | - |
| | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | SLAS (Class II or III) | SL 3 | 07 | 07 | - |
| | கணக்காளர் | SLAcS (Class II or III) | SL 4 | 09 | 06 | 03 |
| | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | SLICT Service II/ III | SL 5 | 01 | - | 01 |
| | சட்ட உத்தியோகத்தர் | Dept | SL 6 | 01 | - | 01 |
| மூன்றாம் நிலை | நிர்வாக உத்தியோகத்தர் | PMAS (Supra) | MN 7 | 04 | 04 | - |
| | மொழி பெயர்ப்பாளர் | TS | MN 6 | 02 | 01 | 01 |
| | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர் | SLICT Service | MN 6 | 05 | | 05 |
| இரண்டாம் நிலை | வரவு செலவுத் திட்ட உதவியாளர் | Related Service | MN 4 | 01 | 01 | |
| | ஓய்வூதிய உத்தியோகத்தர் | Related Service | MN 4 | 340 | 306 | 34 |
| | தொழிநுட்ப உத்தியோகத்தர் | SLTS | MN 3 | 01 | - | 01 |
| | பொது முகாமைத்துவ உதவியாளர் | PMAS | MN 2 | 190 | 107 | 83 |
| | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உதவியாளர் | SLICT Service | MT 1 | 05 | - | 05 |
| | அபிவிருத்தி உத்தியோகத்தர் | D/O | MN 4 | 398 | 325 | 73 |
| | ஆவண உதவியாளர் | Dept | MN 1 | 141 | 135 | 6 |
| ஆரம்ப நிலை | விடுதிப் பொறுப்பாளர் | Dept | PL 1 | 02 | 01 | 01 |
| | சமையாலாளர்/ தோட்டத் தொழிலாளர் | Dept | PL 2 | 04 | 04 | - |
| | சாரதி | D/S | PL 3 | 12 | 11 | 01 |
| | அலுவலகப் பணியாளர் | KKS | PL 1 | 56 | 50 | 06 |

ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions

## நோக்கு

பொருளாதார மற்றும் சமூகவியல் ரீதியில் திருப்திகரமானதோர் ஓய்வூதியர் சமூகத்தினை உருவாக்குதல்.

## கடமை

அரச சேவைக்காகத் தோள் கொடுத்த உத்தியோகத்தர்களது சேவை இறுதி நலன்களை உறுதிப்படுத்துவதன் மூலம் அவர்களது ஓய்வுகால வாழ்விகை மேம்படுத்துதல் மற்றும் கொண்டு நடாத்தவதற்குத் தேவையான உயிரோட்டமிகு பங்களிப்பினை நிதமும் பெற்றுக் கொடுத்தல்.

## நோக்கங்கள்

ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது நலன்தாரிகளுக்கு உறுதிமிக்க பாதுகாப்புக் கட்டமைப்பினை வழங்குதல

# ஓய்வூதிய நடவடிக்கைகள் பற்றிய விவரணம்.

இலங்கையின் சமூக உபசாரச் சேவைகளின் முன்னோடியான ஓய்வூதியத் திணைக்களம் 115 வருட கால வரலாற்றினைக் கொண்டாடுகின்றது. இத் திணைக்களத்தின பிரதான கடப்பாடாவது, தற்சமயம் ஓய்வு பெற்றுள்ள சுமார் 560,000 அளவிலான ஓய்வூதியர் சமூகத்தினது ஓய்வூதியத்தினை வழங்குவதும், அவர்களது சமூக மேம்பாட்டிற்குத் தேவையான நிகழ்ச்சிகளை இனங்கண்டு அவர்களை மீளவும் சமூகத்தின் சுறுசுறுப்பானதோர் சமூகக் குழுவினராக மாற்றியமைக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். மேலும் தற்சமயம் அரச சேவையில் உள்ள, எதிர்காலத்தில் ஓய்வு பெற எண்ணியுள்ள சுமார் 15 இலட்சங்கள் அளவிலான அனைத்து அரச அலுவலர்களது மற்றும் முப்படைகளில் பணிபுரியும் அனைத்து ஆயுதப்படை அதிகாரிகளினதும் ஓய்வூதியத் தேவைப்பாடுகளைப் பாதுகாத்த வண்ணம் அவர்கள் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்திலேயே ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்குத் தேவையான முகாமைத்துவ மற்றும் கொள்கை ரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொள்வது இத்திணைக்களத்தின் பிரதான கடமைப் பொறுப்பாகும்.

## ❖ திணைக்களத்தின் நகர்வுகளை மாற்றியமைத்தல்.

ஓய்வூதியத் திணைக்களத்தின் நகர்வுகள் மாற்றியமைக்கப்பட்ட வருடமாக 2014 ஆம் ஆண்டினை அறிமுகப்படுத்த முடியும். அதாவது இவ் வருடம் ஓய்வூதியத் திணைக்களத்தின் கொள்கை ரீதியில் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் பாரியதோர் மாற்றத்திற்கு வழிகோலியதோர் ஆண்டாகும். அதன்படி அரச அலுவலர்களை ஓய்வு பெறச் செய்வதுடன் தொடர்புறும் சுமார் 3000 அளவிலான நிறுவனங்களுடன் நேரடியான பரிமாற்றங்களை மேற்கொண்ட வண்ணம், அவர்களை அறிவூட்டி மற்றும் ஏற்புடைய அதிகாரங்களைக் கையளித்து அவர்களை வலுவூட்டி, ஓய்வூதியர் மற்றும் ஓய்வூதியத்தின் பெறுமானம் பற்றி அந்நிறுவனங்களினுள் காணப்படும் மனப்பாங்குகளை நேர்மறையான முறையில் வளர்ச்சியடையச் செய்வதற்கான நிகழ்ச்சிகள் அதிகளவில் நடாத்தப்பட்டதுடன், அவற்றின் மூலம் ஓய்வூதியச் செயற்பாட்டினுள் காணப்பட்ட மந்தகதி நிலையினை இல்லாதொழித்து புத்துணர்ச்சியினைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்கள் மற்றும் சுற்றுநிருபங்கள் பலவற்றினை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் ஓய்வூதியத் திணைக்களத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் பெறுபேறாக ஓய்வூதியச் செயற்பாட்டின் உயிரோட்டமிகு பங்காளர்களாக அந்நிறுவனங்களை ஆக்கிக் கொள்ள எம்மால் முடிந்தது.

## ❖ பிரதேச செயலகங்களை அறிவூட்டுதல்.

ஓய்வூதியத்தினை வழங்குவதில் பங்களிக்கும் மாவட்டச் செயலக வலையமைப்பு மற்றும் பிரதேச செயலக வலையமைப்பினை உயிர்ப்பிக்கும் பொருட்டுப் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகள் வலையமைப்பினுள் செயற்படுத்தப்பட்டன. இதன் அடிப்படை நோக்கமாய் அமைந்தது, ஓய்வூதிய உரித்தற்ற நபர்களிடத்தே ஓய்வூதியம் வழங்கப்படல் போன்ற தவறான நிதி உபயோகங்கள் மற்றும் ஓய்வூதியத்தினை வழங்குகையில் இடம்பெறும் ஏனைய நிதி மோசடிகளை முற்று முழுதாக நிறுத்தும் பொருட்டு அவர்களது பொறுப்புக் கூறலை மேம்படுத்த நடடிவக்கையெடுப்பதாகும். இதன் பொருட்டு திணைக்களத்தின் அனைத்து உத்தியோகத்தர்களும் மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களை அறிவூட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## ❖ பொருளாதாரத்தினை வலுவூட்டுதல்.

தற்சமயம் ஓய்வு பெற்றுள்ள சிரேட்ட பிரசைகள் மற்றும் சுமார் 600 ஓய்வூதியர் அமைப்புக்களைச் சார்ந்துள்ள ஓய்வூதிய சமூகத்தினருடன் பிரதேச செயலக மட்டத்தில் செயற்பட்டு அந்நியோன்னிய ரீதியில் தொடர்புகளை பலப்படுத்திக் கொண்ட வண்ணம் சிறந்த இருபக்கக் கொடுக்கல்களைக் கையாண்டு ஓய்வூதியர் சமூகத்தினை மீளவும் உயிர்ப்பித்து இந்நாட்டிற்குப் பெறுமதி மிக்கதோர் குழுவினராய் மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் தனியார் துறையினருடன் இணைந்து ஓய்வூதிய சமூகத்தவரை மீண்டும் இந்நாட்டின் வரவேற்புமிக்கதோர் குழுவாக மாற்றியமைக்கும் நிகழ்ச்சித் தொடரின் ஆரம்பமும் 2104 ஆம் ஆண்டில் இடம் பெற்றது. அதன் ஆரம்ப கட்ட நடவடிக்கையாக அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ள ஓய்வூதியரொருவரிற்கு எவ்விதமானதோர் நிதி நிறுவனத்திலிருந்தும் நிதியியல் வசதிகள் இல்லையேல் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்காகக் காணப்பட்ட தடைகள் களையப்பட்டன. இப் பாரிய நிகழ்வின் தொடக்கத்திற்குப் பான் ஆசியா வங்கி தனது மனமுவந்த பங்களிப்பினை வழங்கியது. இன்றைய தினமாகுகையில் இந்நிகழ்ச்சிக்கு அரச மற்றும் தனியார் வங்கிகள் பலவும் தமது பங்களிப்பினைப் பெற்றுக் கொடுத்துள்ளன. இந்நிகழ்ச்சி மூலம் ஓய்வூதியர், ஓய்வூதியரின் குடும்ப அலகு மற்றும் ஒட்டுமொத்த ஓய்வூதியர் சமூகத்தினதும் பொருளாதாரத்தினை மேம்படுத்துவதற்கு மிக்க உதவியாயிற்று. 2014 ஆம் ஆண்டினுள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஓய்வூதியர்களுக்காக வேண்டி இவ்வணிக வங்கிகளினால் சுமார் 25 மில்லியன் ரூபாய்கள் அளவிலான நிதியியல் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

## ❖ மருத்துவக் காப்புறுதித் திட்டம்.

அரச ஊழியர்களுக்குத் தாம் சேவையில் ஈடுபட்டிருக்கும் காலப்பகுதியில் அக்ரஹார காப்புறுதித் திட்டத்தின் நலன்களை அனுபவிப்பதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது. இவ் வகையிலான காப்புறுதித் திட்டமொன்றினை ஓய்வூதியர்களுக்காக வேண்டியும் அறிமுகப்படுத்தும் படி வேண்டி ஓய்வூதிய சமூகத்தினர் மற்றும் பல்வேறுபட்ட ஓய்வூதியர் அமைப்புக்கள் நிதமும் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன. அவ் வேண்டுகோள்களின் மாற்றீடாக ஓய்வூதியத் திணைக்களத்திற்குத் தனியார் துறையினருடன் ஒன்றிணைந்து இலங்கை வாழ் ஓய்வூதியர் சமூகத்திற்கு மிகச் சிறியளவிலான தவணை முறையொன்றின் கீழ் ''புஹுமன்'' எனும் பெயரில் மருத்துவக் காப்புறுதித் திட்டமொன்றினை அறிமுகப்படுத்த முடிந்தது. இது அரச தரப்பாக ஓய்வூதிய சமூகத்திற்கு ஆற்றிய பாரியதோர் கடமையாகக் குறித்துக் காட்ட முடியும்.

## ❖ தேசிய ஓய்வூதியர் தினம்.

ஓய்வூதிய சமூகத்தினர் தமது ஓய்வூதிய வேண்டுகோள்கள் மற்றும் உரிமைகள் தொடப்பில் மட்டுமே அணி திரண்டுள்ளதோர் யுகத்தில், நாட்டின் பிரசைகளாக அவர்களால் ஆற்றப்பட வேண்டிய கடமைகள் தொடர்பில் அறிவூட்டி, அதற்காக வேண்டி ஓய்வூதியர் சமூகத்தினை நேரடியாகப் பங்குறச் செய்யும் பொருட்டு 2014 ஆம் ஆண்டின் ஓய்வூதியர் தினத்தினை உபயோகிக்க முடிந்தது. 2014 ஆம் ஆண்டில் முதன் முறையாக ஓய்வூதியர் தினம் தேசிய ரீதியில் நடாத்தப்பட்டதுடன், இங்கு ஓய்வூதிய சமூகத்தினர் பற்றி சமூகத்தில் மீளவோர் தெளிவினை ஏற்படுத்துவதற்கு மற்றும் ஓய்வூதிய சமூகத்தினர் சமுதாயத்தின் சிரேஷ்ட பிரசைகளாக ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றியதுமான தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

## ❖ பணிக்கொடையினைத் துரிதப்படுத்துதல்.

2014 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஓய்வூதியத் திணைக்களம் தொடர்பில் ஓய்வூதிய சமூகத்தவரைப் போன்றே அரச அலுவலர்களிடத்தேயும் காணப்பட்ட பிரதான சிக்கல் சுமார் 15,000 அளவிலான ஓய்வூதியப் பணிக்கொடைகள் தொகையொன்று நிலுவையாகக் காணப்பட்டமையாகும். குறித்த சிக்கல் தொடர்பில் பொதுத் திறைசேரியுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் பெறுபேறாக 2014 ஏப்பிறல் மாதமாகுகையில் மாற்றுத் தீர்வொன்றினைப் பெற்றுக் கொள்ள முடிந்தது. அதாவது சுமார் 15,000 அளவிலான நிலுவைப் பணிக்கொடைகளை வழங்குவதற்கு அரச வங்கிகளின் அனுசரணையினைப் பெற்றுக் கொள்ள முடிந்ததாகும். இது ஒட்டு மொத்த இலங்கை வாழ் ஓய்வூதிய சமூகத்தினைப் போன்றே, எதிர்காலத்தில் ஒய்வு பெற எண்ணியுள்ள அனைத்து அரச உழியர்களும் பெற்றுக் கொண்டதோர் வெற்றியாகச் சுட்டிக்காட்ட முடியும். அதன் பெறுபேறாக ஓய்வூதியப் பணிக்கொடைத் தொகைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு வரிசையிலிருந்த சுமார் 15,000 அளவிலான அனைத்து ஓய்வூதியர்களதும் பணிக்கொடைத் தொகைகளை 2014 ஜூன் மாதமாகுகையில் செலுத்தி முடிப்பதற்கு முடிந்தது. அதன்படி 2014 ஜூலை மாதம் முதல் ஓய்வு பெற்ற அரச அலுவலர்களுக்குரிய ஓய்வூதியத்தினை மற்றும் ஓய்வூதியப் பணிக்கொடையினை அவர்கள் ஓய்வு பெற்ற வேளையிலிருந்தே வழங்க முடிந்தது. இதனை ஓய்வூதியத் திணைக்களம் பெற்றுக் கொண்ட பாரியதோர் வெற்றியாகக் காட்ட முடியும்.

## ❖ கொடுப்பனவுகளை மத்திப்படுத்துதல்.

ஓய்வூதியத் திணைக்களத்தினால் கட்டுப்படுத்தப்பட வேண்டியிருந்த பாரிய சிக்கல் எதுவெனில், மாதாந்த ஓய்வூதியத்தினை வழங்குகையில் ஏற்படும் நிதியியல் மோசடிகள் மற்றும் நிதியியல் விரயங்களைத் தடுப்பதாகும். அதாவது மாதாந்த ஓய்வூதியத்தினை வழங்குகையில் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு 331 பிரதேச செயலகங்களுக்கும் மேலதிகமாக வணிக வங்கிகள் வலையமைப்பு மற்றும் தாபலக வலையமைப்புடன் ஒன்றிணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. இச் செயற்பாட்டின் போது ஓய்வூதியத் திணைக்களத்திற்கு முகங் கொடுக்க வேண்டியேற்பட்ட அடிப்படைச் சிக்கல்களில், கால விரயம், தேவையற்ற விதத்தில் அரச நிதி கசிவடைதல், மீண்டெழும் செலவுகள் அசாதாரணமான முறையில் உயர்வடைவதனையும் காண முடிந்தது. இவ்வனைத்துச் சிக்கல்களுக்கும் தீர்வினைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு மாதாந்த ஓய்வூதிய வழங்கல்களை மத்திப்படுத்துவதற்கு ஆரம்பித்தமை 2014 ஆம் ஆண்டில் ஓய்வூதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கியமானதோர் நடவடிக்கையாகும். பண்முகப்படுத்தப்பட்ட செயல்முறையில் மாதாந்த ஓய்வூதியத்தினை வழங்குகையில் ஓய்வூதியம் எவருக்கு வழங்கப்படுகின்றது? எவ்வளவு தொகை மற்றும் அத்தொகை எவ்வளவிற்குச் சரியானது என்பது பற்றிய முறையானதோர் பொறுப்பின்றி குருட்டு வழிமுறையொன்று பின்பற்றப்பட்டுள்ளது என்பது தெளிவானதோர் விடயமாகும். எனினும் 2014 அக்டோபர் மாதம் முதல் ஓய்வூதியத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்ட மத்திப்படுத்தப்பட்ட செயல்முறையின் மூலம் மாதாந்த ஓய்வூதிய வழங்கல்கள் பற்றி துல்லியமாக உறுதிப்படுத்திக் கொள்ள முடிந்ததுடன், தற்சமயமாகுகையில் அதன் நற் பெறுபேறுகளை திணைக்களத்தினைப் போன்றே அரசிடத்தும் பெற்றுக் கொடுக்க முடிந்தது.

## ❖ கணக்காய்வினை வலுப்பெறச் செய்தல்.

2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ள முடிந்த இன்னுமோர் முக்கிய நடவடிக்கை மாதாந்த ஓய்வூதிய வழங்கற் செயற்பாட்டின் நிதி மோசடிகள், ஊழல்கள் மற்றும் அக்கிரமங்களைப் புரிந்த அரச உத்தியோகத்தர்களைப் போன்றே ஓய்வூதியர்களையும் சட்டத்தின் பிடியில் கொண்டுவர முடிந்ததாகும். தற்சமயம் அவர்களுக்கு சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணம் உள்ளன. ஓய்வூதியத் திணைக்களத்திற்கு இந் நடவடிக்கைகளில் கவனம் செழுத்த முடிந்தமைக்கு ஏதுவாய் அமைந்த காரணிகளாக ஓய்வூதியத் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் போன்றே அரச கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பில் விசேட கவனத் செழுத்தியமையினையும் குறிப்பிட முடியும்.

### ❖ ஓய்வூதியத்திற்கோர் புத்துயிர்.

அதாவது இவ்வருடத்தினுள் ஓய்வூதியத் திணைக்களத்தின் கொள்கையியல் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் பாரியதோர் பரிமாற்றத்திற்கு வித்திட்டதோர் ஆண்டாகும். அதன் படி அரச அலுவலர்களை ஓய்வு பெறச் செய்வதுடன் தொடர்புறும் சுமார் 3000 அளவிலான நிறுவனங்களுடன் நேரயாகக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்ட வண்ணம், அவர்களை வலுப்பெறச் செய்து, ஓய்வூதியர் மற்றும் ஓய்வூதியத்தின் பெறுமானம் பற்றி அந்நிறுவனங்களினுள் காணப்படும் மனப்பாங்குகளை நேர்மறையான முறையில் வளர்ச்சியடையச் செய்வதற்கான நிகழ்ச்சிகள் அதிகளவில் நடாத்தப்பட்டதுடன், அவற்றின் மூலம் ஓய்வூதியச் செயற்பாட்டினுள் காணப்பட்ட மந்தகதி நிலையினை இல்லாதொழித்து புத்துணர்ச்சியினைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்கள் மற்றும் சுற்றுநிருபங்கள் பலவற்றினை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் ஓய்வூதியத் திணைக்களத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அதன் பெறுபேறாக ஓய்வூதியச் செயற்பாட்டின் உயிரோட்டமிகு பங்காளர்களாக அந்நிறுவனங்களை ஆக்கிக் கொள்ள எம்மால் முடிந்தது.

2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இம் முக்கிய நடவடிக்கைகளினால் ஓய்வூதியம் தொடர்பில் முழு அரச சேவையிலும் காணப்பட்ட, எதிர்காலத்தில் ஒய்வூதியம் கிடைக்கப் பெறுமோ? என்ற சந்தேகத்தினைக் களைந்தெறிய முடிந்ததுடன், ஓய்வூதியத் திணைக்களம் பற்றி முழுச் சமூகத்தினுள்ளும் காணப்பட்ட அச்சத்தினை அகற்றி விடவும் முடிந்தது.

### ❖ கணணி வலையமைப்பு

மேலும் இத்திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்ட இ-பென்சன் கருத்திட்டம் தற்சமயமாகுகையில் செயலற்றிருப்பினும், திணைக்களத்தின் வளங்களைப் பயன்படுத்தி அக் கணணி வலையமைப்பினை மீளவும் செயல்வலு நிலைக்கு மாற்றியமைக்க முடிந்தது. இவ் வலையமைப்பினைத் தொடர்ந்தும் விரிவடையச் செய்து எதிர்காலத்தில் ஒய்வூதியர் சமூகத்துடன் பின்னலொன்றினை ஆரம்பிப்பதற்குத் திணைக்களத் எதிர்பார்த்துள்ளது.

### ❖ கவர்ச்சிகரமான விடுமுறை விடுதிகள்

ஒய்வூதியத் திணைக்களத்திற்குச் சொந்தமான களனி வெதமுல்லை ஒய்வூதியர் விடுமுறை விடுதி, நீண்டகாலம் பயன்பாட்டிற்கு உட்படாது பாவனைக்குதவாத நிலையில் காணப்பட்டதுடன், தற்சமயமாகுகையில் அவ்விடுமுறை விடுதியினை மீளவும் உகந்த நிலைக்கு உட்படுத்தி, பல்வேறுபட்ட மாற்றங்களை ஏற்படுத்திய வண்ணம், ஓய்வூதியர்களுக்கு மிக்க ஏற்ற வண்ணம், கவர்ச்சிமிகு சூழலினை ஏற்படுத்தி அவர்களுக்குத் தங்குமிட வசதிகளைப் போன்றே பல்வேறுபட்ட ஒன்றுகூடல்கள் மற்றும் நிகழ்ச்சிகளை நடாத்த இயலும் வண்ணம் மேம்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக ஒய்வூதியத் திணைக்களத்திற்குரிய மிகக் கவர்ச்சிகரமானதோர் இயற்கைச் சூழலில் அமைந்துள்ள புத்தம் புது விடுமுறை விடுதியான இறம்பொடை ஓய்வூதியர் விடுமுறை விடுதியும் 20-06-2014 ஆந் திகதி திறந்து வைக்கப்பட்டது. இவ் விடுமுறை விடுதியினை ஒய்வூதியர்களின் உபயோகத்திற்கு மட்டுமன்றி, ஏனைய அரச உத்தியோகத்தர்களின் பாவனைக்கும் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அரசிற்கு வருமானத்தினை சேகரித்துக் கொடுப்பதற்கு ஓய்வூதியத் திணைக்களத்தினால் முடிந்துள்ளது.

## ❖ மனித வள அபிவிருத்தி

2014 ஆம் ஆண்டில் ஒய்வூதியத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான பல்வேறுபட்ட பயிற்சி நிகழ்வுகளை நடாத்துவதன் மூலம் அவர்களுக்குத் திணைக்களத்திற்குரிய கடப்பாடுகள் மற்றும் திணைக்களத்திற்கு வருகை தரும் ஓய்வூதியர்களுக்கான சேவைகளை நல்லுறவு, வினைத்திறன் மற்றும் துரிதமாக நிறைவேற்றிக் கொடுக்கும் பொருட்டிலான விசேட பயிற்சிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அவ்வாறே முதன் முறையாக ஓய்வூதியத் திணைக்கள உத்தியோகத்தர் குழுவொன்றிற்கு வெளிநாட்டுப் பயிற்சியொன்றினைப் பெற்றுக் கொடுக்க முடிந்தமையினைத் திணைக்களத்திற்குக் கிடைத்ததோர் வெற்றியாகக் கருத முடியும். இவ்வாறான பயிற்சி நிகழ்வுகளைப் பெற்றுக் கொடுப்பதன் நோக்கம் திணைக்கள மனித வளத்தினால் வினைத்திறன் மற்றும் பயன்மிக்க சேவையொன்றினைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் ஓய்வூதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் கடப்பாடுகளினால் அதனை அரச துறையில் முன்னனியில் திகழும் நிறுவனமாக மாற்றி அமைப்பதாகும்.

## ❖ வள அபிவிருத்தி

ஓய்வூதியத் திணைக்களத்தில் நிறுவன ரீதியில் காணப்பட்ட வீண் விரயமாகக் காட்ட இயலும் நீர், மின்சாரம் போன்றே தொலைபேசிப் பாவனையையும் 2014 ஆம் ஆண்டில் தெளிவாகக் குறைக்க முடிந்ததன் ஊடாக அதற்கு முன்னைய வருடங்களில் செலவிடப்பட்ட தொகைகளைச் சேமித்துக் கொள்ளத் திணைக்களத்திற்கு முடிந்துள்ளது. அவ்வாறு சேமிக்கப்பட்ட தொகைகளை திணைக்களத்தின் நவமயப்படுத்தல் நடவடிக்கைகளைப் போன்றே, பிற முதலீட்டுத் திட்டங்களில் இடுவதன் மூலம் அரச வருமானத்திற்கான பங்களிப்பினைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஓய்வூதியத் திணைக்களத்தினால் முடிந்துள்ளது.

2014 ஆம் ஆண்டில் ஆண்டில் இவ் வெற்றி இலக்கினை அடைந்து கொள்ள ஓய்வூதியத் திணைக்களத்திற்கு ஆரம்பத்திலேயே அரச நிர்வாக அமைச்சினால் கிடைத்த ஒத்துழைப்பினைப் பாராட்டுதல் வேண்டும். அதற்கு மேலதிகமாக ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் மூலம் கிடைத்த ஒத்துழைப்பினுள் இவ்வெற்றியினை அடைந்து கொள்ள முடிந்தது என்பதனையும் பணிவுடன் நினைவு கூறுதல் வேண்டும்.

அதன் படி 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ‘‘ஒய்வூதியர் சமூகத்திற்கான புதியதோர் ஒளிக்கீற்று’’ எனும் தலைப்பின் கீழ் எதிர்காலத்தில் ஓய்வு பெறவுள்ள ஓய்வூதியர்களுக்காகத் தற்சமயம் வழங்கப்படவுள்ள ஓயூதியத்திற்கு மேலதிகமாக Pension+ கருத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட நலன்களும் ஓய்வூதியர்களின் ஓய்வு வாழ்வினை மிக்க சுகபோகமுடையதாக்க வழிகோலியுள்ளது எனவும் கூற முடியும்.
இது 2014 ஆம் ஆண்டுடன் மட்டும் முடிவுறாத வருடா வருடம் இன்னும் புதிய பல நலன்களை உள்ளடக்கிய வண்ணம் பரவலடையும் ஒரு நிகழ்ச்சியின் ஆரம்பப் படியாகும்.

## 1. பதிவு செய்தற் பிரிவு

ஓய்வூதிய வழங்கற் செயற்பாட்டின் முதல் நடவடிக்கையான ஓய்வூதியர்களைப் பதிவு செய்யும் பொருட்டு செயற்பாட்டினது முதல் படிநிலையாக பதிவு செய்தற் பிரிவு செயற்படுகின்றது. ஓய்வு பெறும் அனைத்து உத்தியோகத்தர்களதும் விண்ணப்பங்களைப் பரீட்சித்தல், பதிவு செய்தல் மற்றும் ஓய்வூதிய இலக்கங்களைப் பெற்றுக் கொடுத்தல் என்பன பதிவு செய்தற் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.




**வரைபு 01: ஓய்வூதியப் பதிவுகள்**
**மூலம் - பதிவு செய்தற் பிரிவு**

## 1.1 முதல் ஓய்வூதிய வழங்கற் செயற்பாடு.

01-10-2014 ஆந் திகதி முதல் 14/2014 சுற்றுநிருபத்தின் கீழ் முதல் ஓய்வூதியக் கொடுப்பனவு நடவடிக்கைகள் பதிவு செய்தற் பிரிவிலிருந்து ஆரம்பமாயின. முன்னர் காணப்பட்ட கொடுப்பனவுச் செயற்பாட்டின் படி குறித்த நிறுவனத்தினால் பிரதேச செயலகத்திடத்தே கோவையினை அனுப்பியதன் பின்னர் அதன் குறைபாடுகளைப் பரீட்சிப்பதற்கு கூடிய காலத்தினைச் செலவிடுதல் மற்றும் செழுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகைகளின் அளவு அதிகரித்தமையினால் கொடுப்பனவு நடவடிக்கைகள் தாமதமடைந்தன. எனினும் முதற் கொடுப்பனவுச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் உத்தியோகத்தர் ஓய்வு பெற்ற தினத்திலிருந்தே ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன், பிரதேச செயலகத்திடத்தே அனுப்பாது ஓய்வூதியத் திணைக்களத்திடம் கோவையினைச் சமர்ப்பிப்பது போதுமானதாகும். புதிய ஓய்வூதிய வழங்கற் செயற்பாட்டிற்கு ஓய்வூதியரின் வங்கிக் கணக்கு மற்றும் குறித்த நிறுவனத்தினால் ஓய்வூதியத்தினை அங்கீகரித்த கடிதம் என்பன மட்டும் கொடுப்பனவுகளுக்குப் போதுமானதாகும்.




**வரைபு 02 – கொடுப்பனவிற்கு அனுப்பிய விண்ணப்பங்களின் எண்ணிக்கை**
**மூலம் - பதிவு செய்தற் பிரிவு**

### 1.2 ஆயுதப் படைச் சேவை ஓய்வூதியங்கள்

முப்படைகளதும் உத்தியோகத்தர்கள் மற்றும் படைக்கலச் சேவைகளுடன் தொடர்புறும் ஏனைய நிலைகளது ஓய்வூதியம் தொடர்பிலான அனைத்து நடவடிக்கைகளதும் முகாமைத்துவம் மற்றும் அவர்களது ஓய்வூதியங்களைக் கணிப்பிட்டுக் கொடுப்பனவுகளை மேற்கொள்வது இப்பிரிவின் பிரதான கடப்பாடாகும். 10-10-11949 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஓய்வூதியப் பிரமாணக் குறிப்பின் மூலம் இராணுவத்தின் நிரந்தர சேவைகளுடன் தொடர்புறும் அதிகாரிகளுக்கு மற்றும் ஏனைய நிலைகளுக்கு ஓய்வூதிய உரித்துப் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அவ் உரித்து தொண்டர் படையணிகளின் உத்தியோகத்தர்கள்/ ஏனைய நிலைகள் இராணுவப் பெண் உத்தியோகத்தர்கள் மற்றும் படை வீராங்கனைகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டது 01-09-1981 ஆந் திகதி வெளியிடப்பட்ட இராணுவப் படை ஓய்வூதியம் மற்றும் பணிக் கொடைப் பிரமாணக் குறிப்பின் மூலமாகும். மேற்குறித்த பிரமாணக் குறிப்புக்கள் மற்றும் அவ்வப்போது வெளியிடப்பட்ட ஓய்வூதியச் சுற்றுநிருபங்களை அடிப்படையாகக் கொண்டு ஆயுதப் படைச் சேவைகளுக்கான ஓய்வூதிய வழங்கற் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.




**வரைபு 03 – ஆயுதப்படைகளின் பதிவுகள்**
**மூலம் - பதிவு செய்தற் பிரிவு**

## 2. ஓய்வூதிய வழங்கல்களின் வளர்ச்சி

### ஓய்வூதிய வழங்கல்கள் - ஓய்வூதிய வகைப்படுத்தல்களின் படி 2014

| ஓய்வூதிய வகைப்படுத்தல் | ஓய்வூதியர்கள் | வழங்கப்பட்ட தொகை |
|---|---|---|
| சிவில் | 337,105 | 79,444,482,364.54 |
| விதவைகள் மற்றும் அனாதைகள் | 145,261 | 22,606,187,860.00 |
| ஆயுதப் படைகள். | 54,254 | 14,622,139,869.63 |
| தனியார் பாடசாலைகள்/ பிரிவேனா ஆசிரியர்கள் | 4,055 | 1,018,691,653.27 |
| உள்ளூராட்சி | 5,704 | 884,598,278.72 |
| **மொத்தம்** | 546,379 | 118,576,100,026.16 |

அட்டவணை 01 - ஓய்வூதிய வழங்கல்கள் - ஓய்வூதிய வகைப்படுத்தல்களின் படி 2014

மூலம் - கணக்குப் பிரிவு




வரைபு 04 – ஓய்வூதிய வகைப்படுத்தல்களின் படி ஓய்வூதியர்கள்

மூலம் - கணக்குப் பிரிவு




வரைபு 05 – ஓய்வூதிய வழங்கல்கள்

மூலம் - கணக்குப் பிரிவு




வரைபு 06 – ஓய்வூதியப் பணிக்கொடை வழங்கல்கள்

மூலம் - கணக்குப் பிரிவு




வரைபு 07 – நிதி நிறுவனங்களின் அடிப்படையில் ஓய்வூதிய வழங்கல்கள்

மூலம் - கணக்குப் பிரிவு




வரைபு 08 – ஓய்வூதிய வகைப்படுத்தல்களின் படி ஓய்வூதிய வழங்கல்கள்

மூலம் - கணக்குப் பிரிவு




மாவட்ட அடிப்படையில் ஓய்வூதியர்கள் - 2014

## மாவட்ட அடிப்படையில் வழங்கப்பட்ட ஓய்வூதியத்தின் அளவு - 2014



## 2.1 வெளிநாட்டு ஓய்வூதிய வழங்கல்கள்

**வெளிநாடொன்றின் பிரசாவுரிமையினைக் கொண்ட அல்லது வெளிநாடொன்றில் நிரந்தர வதிவினைக் கொண்டுள்ள அல்லது வருடமொன்றிலும் மேற்பட்ட காலப்பகுதி மத்திய கிழக்கு நாடுகள் தவிர்ந்த ஏனைய நாடுகளில் வசிக்கும் இலங்கை ஓய்வூதிய சமூகத்தவரின் மாதாந்த ஓய்வூதியம், விதவைகள் மற்றும் தபுதாரர் ஓய்வூதியம் மற்றும் அனாதைக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட ஏனைய நலன்களை வழங்குவதனைத் தொடராக மற்றும் சரியாகப் பெற்றுக் கொடுத்தல் வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவின் அடிப்படை நோக்கமாகும்.**




வரைபு 09 – ஓய்வூதியர்களின் எண்ணிக்கை

மூலம் - வெளிநாட்டு ஓய்வூதியப் பிரிவு

## 3. விதவைகள், தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பிரிவு.

ஓய்வூதிய உரித்துடைய பதவிகளை வகிக்கும், விதவைகள்/ தபுதாரர் திட்டத்தில் பங்களித்துள்ள உத்தியோகத்தர்கள் உயிரிழந்ததன் பின்னர் அவர்களது துணைவர்களுக்கு, அனாதைப் பிள்ளைகளுக்கு மற்றும் வலது குறைந்த அனாதைப் பிள்ளைகளுக்கு மாதாந்த ஓய்வூதியமொன்றினை வழங்குதல் விதவைகள் அனாதைகள் ஓய்வூதியச் செயற்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. விதவைகள், தபுதாரர், அனாதைகள், வலது குறைந்த நபர்களுக்கு இதன் கீழ் கொடுப்பனவுகள் உரித்தாகின்றன. 2014 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட நடமாடும் சேவைகள் மூலம் விதவைகள், தபுதாரர் பதிவிலக்கங்களைப் பெறறுக் கொடுக்க முடிந்தது.




**வரைபு 10 – விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் பதிவு செய்தல்.**

**மூலம் - விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பிரிவு**

ஓய்வூதியத் திணைக்களத்தின் விதவைகள் மற்றும் அனாதைகள் நிதியத்திற்கு 5,558 மில்லியன் ரூபாய்கள் மாகாண சபைகளது நிறுவனங்களிலிருந்தும், 9,376 மில்லியன் ரூபாய்கள் மத்திய அரச நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கப் பெற்றுள்ளன. அதன் படி 2014 ஆம் ஆண்டில் ஓய்வூதியத் திணைக்களத்திற்குக் கிடைத்த மொத்த விதவைகள் மற்றும் அனாதைகள் பங்களிப்புத் தொகை 14,934 மில்லியன் ரூபாய்களாகும்.




**வரைபு 11 - விதவைகள் மற்றும் அனாதைப் பங்களிப்புத் தொகைகள் கிடைக்கப்பெறல்.**

**மூலம் - விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியப் பிரிவு**

## 4. நிர்வாக மற்றும் பயிற்சிப் பிரிவு.

ஓய்வூதிய வழங்கற் தொகுதியில் இருந்து இனங்காணப்பட்ட குறைபாடுகளை அகற்றி நவீன மயப்படுத்தப்பட்ட ஓய்வூதிய வழங்கற் தொகுதியின் 9.4 தொகுப்பு மற்றும் கையேட்டினை அறிமுகப்படுத்தும் பொருட்டு ஓய்வூதியம் வழங்கப்படுகின்ற அனைத்துப் பிரதேச செயலகங்களும் உள்வாங்கப்படும் வண்ணம் 25 மாவட்டச் செயலகங்களில் அறிவூட்டல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

ஓய்வூதிய வழங்கற் செயற்பாட்டினைத் துரிதப்படுத்தும் நோக்கில் வெளியிடப்பட்ட 14/2014 சுற்றுநிருபம் மற்றும் அதன் முன் நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்தும் பொருட்டு அரச அமைச்சுக்கள் அனைத்தும் உள்வாங்கப்படும் வண்ணம் மேலதிகச் செயலாளர்களும், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகத்துடன் தொடர்புறும் உத்தியோகத்தர்களும் திணைக்களத்திற்கு வரவழைக்கப்பட்டதுடன், அதிகளவில் ஓய்வூதிய விண்ணப்பங்களை அனுப்புகின்ற நிறுவனங்களை இனங்கண்டு அந்நிறுவனங்களுக்காக ஓய்வூதியத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அந்நிறுவனங்களுக்குச் சென்று அறிவூட்டல்களை மேற்கொண்டனர்.

ஓய்வூதியத் திணைக்களத்தில் நவீன நிறுவனக் கலாச்சாரமொன்றினை உருவாக்கும் நோக்கின் படி திணைக்களத்தில் மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள அனைத்துப் பதவிநிலை, பதவி நிலையற்ற மற்றும் சிற்றூழியர்கள், சாரதிகளை ஒருங்கிணைத்த வண்ணம் OBT பயிற்சியொன்று களணி, வெதமுல்லை ஓய்வூதியர் விடுமுறை விடுதியில் நடாத்தப்பட்டது.

ஓய்வூதியத் திணைக்களச் செயற்பாட்டினை இற்றைப்படுத்தல் மற்றும் நவீன தொழினுட்பம் மற்றும் நவீன நிலைகளை நிறுவனத்தினுள் ஊடுறுத்துவதனை இலக்காகக் கொண்டு மலேசியாவின் Post Service Department இனது நடவடிக்கைகளை ஆய்வு செய்யும் பொருட்டு ஓய்வூதியத் திணைக்களத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்கள் 04 பேரும், ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் 12 பேரும் வெளிநாட்டுப் பயிற்சியொன்றில் கலந்து கொண்டனர்.

## 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகள்.

| இடம் | பதவிகள் | மாகாணம் | திகதி |
|---|---|---|---|
| **ஓய்வூதியத் திணைக்கள கேட்போர் கூடம்** | அனைத்து மாவட்டச் செயலகங்களதும் கணக்காளர்கள் | அனைத்து மாவட்டங்கள் | 19-05-2014 |
| **ஓய்வூதியத் திணைக்கள கேட்போர் கூடம்** | ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் | மேல் மாகாணம் | 26-05-2014 |
| **அனுராதபுர மாவட்டச் செயலகம்** | ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் | வட மத்திய மாகாணம் | 29-05-2014 |
| **1. மன்னார் மாவட்டச் செயலகம்.**<br>**2. முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்.**<br>**3. யாழ் மாவட்டச் செயலகம்** | ஓய்வூதிய உத்தியோகத்தர்கள்<br>ஓய்வூதிய உத்தியோகத்தர்கள்<br>ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் | வட மாகாணம் | 30-05-2014<br>05-06-2014<br>06-06-201 |
| **இரத்தினபுரி மாவட்டச் செயலகம்.** | ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் | சப்பிரகமுவ மாகாணம் | 02-06-2014 |
| **பதுளை மாவட்டச் செயலகம்.** | ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் | ஊவா மாகாணம் | 03-06-2014 |
| **மாத்தறை மாவட்டச் செயலகம்** | ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் | தென் மாகாணம் | 09-06-2014 |
| **1. அம்பாறை மாவட்டச் செயலகம்.**<br>**2. திருகோணமலை மாவட்டச் செயலகம்.** | ஓய்வூதிய உத்தியோகத்தர்கள்<br>ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் | கிழக்கு மாகாணம் | 10-06-2014<br>17/20-06-2014<br>18-06-2014 |
| **கண்டி மாவட்டச் செயலகம்.** | ஓய்வூதிய உத்தியோகத்தர்கள் | மத்திய மாகாணம் | 13-06-2014 |

**அட்டவணை 02 - 2014 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகள்.**

**மூலம் - நிர்வாக மற்றும் பயிற்சிப் பிரிவு**

## 5. கொள்கைகள் மற்றும் சட்டப்பிரிவு

ஓய்வூதியக் கொடைகள் மற்றும் கொடுப்பனவுச் செயற்பாட்டினை துரிதமாக மற்றும் வினைத்திறன்மிக்க வண்ணம் கொண்டு நடாத்துகையில் ஏற்புடைய சட்ட நிபந்தனைகளை வரைதல் அடிப்படையானதோர் கருமமாகும். அவ்வாறு வரையப்படுகின்ற சட்டதிட்டங்கள் ஓய்வூதியங்களுடன் வலைப்பின்னப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களிடத்தேயும் அறிவித்தனுப்புதல் இடம் பெறுகின்றது. மேலும் சட்டரீதியான சிக்கல்கள் மேலெழும் சந்தர்ப்பங்களின் போது சட்டமா அதிபர் திணைக்களத்துடன் தொடர்புகளைப் பேணிய வண்ணம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்தினை எதிராளியாக்கிய வண்ணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நீதித்துறை நடவடிக்கைகளின் போது தேவையான சட்ட அறிவுறுத்தல்கள் மற்றும் அவதானிப்புக்களைப் பெற்றுக் கொடுத்துத் திணைக்களத்தினைப் பிரதிநிதிப்படுத்துவதும், ஓய்வூதியங்களை வழங்குதல்/ ஓய்வூதிய உரித்தினை அளிக்கையில் நிறுவன ரீதியில் மற்றும் தனிப்பட்ட ரீதியல் விசாரணைக்ள மேற்கொள்ளப்படுகின்ற வினவல்களுக்கும் ஏற்புடைய அறிவுறுத்தல்களை வழங்குதல் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

## 2014 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள ஓய்வூதியச் சுற்றுநிருபங்கள்

| *வெளியிடப்பட்ட திகதி* | *சுற்றுநிருப இலக்கம்* | *விடயம்* |
|---|---|---|
| **2014-01-10** | **01/2014** | 2014 வரவு செலவுத்திட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் வாழ்க்கைப்படிக் கொடுப்பனவினை மீளாய்வு செய்தல். |
| **2014-02-20** | **02/2014** | பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக உயிரிழந்துள்ள மற்றும் காணாமற் போயுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் தங்கி வாழ்வோரிடத்தே தங்கி வாழ்வோர் கொடுப்பனவினை வழங்குதல். |
| **2014-03-25** | **03/2014** | தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கான விருப்பினைத் தெரிவித்தல்/விதவைகள்-தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியச் சட்டத்தின் திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல். |
| **2014-03-26** | 04/2014 | ஓய்வு பெறும் அரச அலுவலர்களுக்கான பணிக்கொடை வழங்கல்களைத் துரிதப்படுத்துதல். |
| **2014-04-07** | 01/2011 (மீளாய்வு I) | மாதாந்த ஓய்வூதிய வழங்கல்கள் மற்றும் நிலுவை ஓய்வூதிய வழங்கல்களை நெறிப்படுத்துதல். |
| **2014-04-07** | **07/2010 (II)** | ஓய்வு பெற்ற சிரேட்ட பிரஜைகளுக்குத் தவணை அறவீட்டு அடிப்படையில் தம்பதிவ யாத்திரைக்கான விமானப் பயணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொடுத்தல் - மிஹின் லங்கா விமான நிறுவனம் |
| **2014-05-02** | 04/2014 (மீளாய்வு I) | ஓய்வு பெறும் அரச அலுவலர்களுக்கான பணிக்கொடை வழங்கல்களைத் துரிதப்படுத்துதல். |

| | | |
|---|---|---|
| 2014-06-19 | 05/2014 | ஓய்வு பெறும் அரச அலுவலர்களுக்கான பணிக்கொடை வழங்கல்களைத் துரிதப்படுத்துதல். |
| 2014-06-23 | 06/2014 | நிலுவை ஓய்வூதிய வழங்கல்களை இடைநிறுத்துதல். |
| 2014-07-03 | 06/2014 (I) | நிலுவை ஓய்வூதிய வழங்கல்களை இடைநிறுத்துதல். |
| 2014-07-03 | 07/2014 | ஓய்வு பெறும் அரச அலுவலர்களுக்கான பணிக்கொடை வழங்கல்களைத் துரிதப்படுத்துதல். |
| 2014-07-04 | 08/2014 | ஓய்வு பெற்ற சிரேட்ட பிரசைகளின் பாதுகாப்பிற்காக வேண்டி ‘‘புஹுமன்’’ காப்புறுதித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல். |
| 2014-07-15 | 06/2014 (II) | நிலுவை ஓய்வூதிய வழங்கல்களை இடைநிறுத்துதல். |
| 2014-07-25 | | ஓய்வூதியர் சமூகத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கான கடன் வசதிகளை வழங்குதல். |
| 2014-08-07 | 09/2014 | வங்கி மூலம் ஓய்வூதியத்தினைப் பெற்றுக் கொண்ட ஓய்வூதியர்களது ஓய்வூதியத்தினைத் தற்காலிகமாக இடைநிறுத்தும் சந்தர்ப்பங்களில் மீளவும் அதனை மீளச் செழுத்த வேண்டிய முறை. |
| 2014-08-07 | 10/2014 | ஓய்வு பெறும் அரச அலுவலர்களுக்கான பணிக்கொடை வழங்கல்களைத் துரிதப்படுத்துதல். |
| 2014-08-21 | | ஓய்வூதியர் சமூகத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கான கடன் வசதிகளை வழங்குதல். |
| 2014-08-26 | 11/2014 | பிரதேச செயலகங்களின் ஓய்வூதிய வழங்கல்களை இலகுபடுத்தும் பொறிமுறையொன்றினை நடைமுறைப் படுத்துதல். |
| 2014-09-17 | **02/2014** | பிரதேச செயலகங்களின் ஓய்வூதிய வழங்கல்களை இலகுபடுத்தும் பொறிமுறையொன்றினை நடைமுறைப் படுத்துதல். |
| 2014-09-19 | **03/2014** | ஆயுதப்படைச் சேவை விதவைகள் ஓய்வூதியங்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல். |
| 2014-10-15 | | 2104 வரவு செலவுத்திட்ட யோசனைகளைச் செயற்படுத்ததல் - மோட்டார் சைக்கிள்களைப் பெற்றுக் கொடுத்தல். |

**அட்டவணை 03 - 2014 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள ஓய்வூதியச் சுற்றுநிருபங்கள்**

**மூலம் - கொள்கைகள் பிரிவு**

